மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பல்லடம்
அ.வ.எண். 139/2021

பெயர் : ராமசாமி
சாட்சி – வா.சா–1 நாள்: 04.11.2025

---

**குறுக்கு விசாரணை**

1. எனக்கு எழுதப் படிக்க தெரியாது. வா.சா.ஆ.2 பாகசாசன ஆவணத்தில் ராமசாமி என்று நான் கையெழுத்து போட்டுள்ளேனா என்றால் நான் கையெழுத்து எதுவும் போடவில்லை. எனது வழக்குரை, வக்காலத்து மற்றும் நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்துக்கள் என்னுடையதா என்றால் என்னுடையதல்ல. நான் கையெழுத்து எதுவும் போடவில்லை.

2. என்ன பரிகாரம் கேட்டு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் எனக்கு தெரியாமல் கிரையம் செய்துவிட்டார்கள் என்று போட்டுள்ளேன். என்ன சொல்லியுள்ளேன் என்றால் என்னுடைய கையெழுத்து இல்லாமல் கிரையம் செய்துவிட்டார்கள் என்று சொல்லியுள்ளேன். பொய் சாட்சியம் அளித்தால் தண்டனை கிடைக்கும் என்று எனக்கு தெரியும்.

3. எனது வழக்குரை, மற்றும் வாக்குமூலங்களை எனது வழக்கறிஞர் தான் தயார் செய்தார். அதில் என்ன எழுதப்பட்டுள்ளது என்ற விவரம் எதுவும் எனக்கு தெரியாது. பிரதிவாதிகள் என்ன எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது. கரைப்புதூர் கிராமம் க.ச.33/1 காலையில் 1ம் பரிதிவாதி பழனிச்சாமியுடம் சேர்ந்து நான் 3.60 ஏக்கர் கிரையம் பெற்றேன் என்றால் சரிதான். நாங்கள் கிரையம் பெற்ற சொத்திற்கு செக்குப்பந்தி நான்கு எல்லைகளில் யாருடைய பூமி என்று தெரியாது, தென்புறம் மட்டும் காளியப்பகவுண்டருக்கு சொந்தமான பூமி உள்ளது.

4. க.ச.33 காலையில் மேற்படி கிரைய சொத்தினைத்தவிற வேறு எந்த சொத்தும் எனக்கு கிடையாது. நாங்கள் சுப்பையகவுண்டர், அம்மாசைகுட்டி ஆகியோரிடம் தான் கிரையம் பெற்றோம். கிரையம் வாங்கிய போது கிரைய சொத்துவிவரத்தில் குறிப்பிட்டுள்ள 4 எல்லைகளின் அடிப்படையில் 3.60 ஏக்கர் சொத்து உள்ளது என்றால்

சரிதான். எங்கள் சொத்திற்கு மேல்புறம் நல்லிகவுண்டருக்கு பாத்தியப்பட்ட தென்வடல் தடம் உள்ளது என்றால் சரிதான்.

5. மேற்படி 3.60 ஏக்கர் தற்போது க.ச.33/1டி என உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். உட்பிரிவின் படி க.ச.33/1டி காலையில் 3.60 ஏக்கர் உள்ளது என்றால் சரிதான். க.ச.33/1டி காலையை பொறுத்து நானும் 1ம் பிரதிவாதி பழனிச்சாமியும் 10.07.2009 தேதியில் பாகம் பிரித்துக் கொண்டோம் என்றால் சரிதான். க.ச.33/1டி காலையில் தென்புறம் 1.80 ஏக்கர் எனக்கும், வடபுறம் 1.80 ஏக்கர் 1ம் பிரதிவாதி பழனிச்சாமிக்கும் என்று பிரித்துக்கொண்டோம் என்றால் சரிதான்.

6. வருவாய் ஆவணங்களில் நல்லிக்கவுண்டருக்கு பாத்தியப்பட்ட தடமானது க.ச.33/1சி என்று உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். க.ச.33/1பி காலையானது சுப்பிரமணியம், தேவராஜ், திவ்யா, ராமாத்தாள், தங்கமுத்து, யுவராஜ் ஆகியோர்களுக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். சுப்பிரமணியம், ராமாத்தாள், திவ்யா, தேவராஜ் ஆகியோர்களுக்கு க.ச.33/1பி காலையில் தெற்கோட்டில் பூமி பாத்தியமானது என்றால் சரிதான். நடுபாகம் யுவராஜின் தங்கமுத்து என்பவருக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். வடபாகம் யுவராஜிற்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான்.

7. எனது சகோதரர் பழனிச்சாமி பூமிக்கு வடபுறமாக ரத்தினவேலு என்பவருக்கு பாத்தியப்பட்ட க.ச.27 காலை பூமி உள்ளது என்றால் சரிதான். க.ச.33/1சி காலையில் உள்ள தென்வடல் தடத்தினைப்பொறுத்து நல்லிக்கவுண்டர், தங்கம்மாள், ரங்கசாமி கவுண்டர் ஆகியோர்கள் 1951ம் ஆண்டில் தடபாத்திய ஒப்பந்தப் பத்திரத்தை ஏற்படுத்திக் கொண்டார்கள் என்றால் சரிதான்.

8. நாங்கள் கிரையம் பெற்ற 3.60 ஏக்கர் பூமிக்கு மாமூல் தடம் என்று தான் பாதை குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நாங்கள் கிரையம் பெற்ற கிரையப்பத்திரத்தில் க.ச.33/1சி காலை தடத்தின் வழியாக வரவேண்டும் என்று எதுவும் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். நானும், 1ம் பிரதிவாதி பழனிச்சாமியும் 1985ம் ஆண்டு நாங்கள் கிரையம் பெற்ற ஆவணத்தின் அடிப்படையில் தான் 2009ம் ஆண்டு பாகம் பிரித்துக்கொண்டோம் என்றால் சரிதான்.

9. வா.சா.ஆ.2 பாகப்பிரிவினை பத்திரத்தில் க.ச.33/1 சி தென்வடல் வண்டித்தடம் என்று நாங்களாக தான் குறிப்பிட்டுள்ளோம் என்றால் சரிதான். க.ச.33/1 சி காலையைப் பொறுத்து அடிநிலத்தில் எங்களுக்கு உரிமை கிடையாது என்றால் சரியல்ல எங்களுக்கு உரிமை உள்ளது. எந்த ஆவணத்தின் அடிப்படையில் பாத்தியம் என்றால் எல்லா ஆவணத்திலும் குறிப்பிடப்பட்டுள்ளது. நாங்கள் கிரையம் பெற்ற வா.சா.ஆ.1 ஆவணத்தில் 3.60 ஏக்கர் மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். 3.60 ஏக்கர் பரப்பளவிற்கு அதிகமாக நாங்கள் வேறு சொத்துக்கள் எதுவும் கிரையம் பெறவில்லை என்றால் சரிதான்.

10. நாங்கள் பாகம் பிரித்துக் கொண்ட வா.சா.ஆ.2 பத்திரத்திலும் 3.60 ஏக்கர் என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.1 மற்றும் வா.சா.ஆ.2 ஆவணங்களில் எங்களுக்கு 3.60 ஏக்கர் மட்டும் பாத்தியம் என்றுள்ளபோது க.ச.33/1 சி காலையில் அடிநிலம் பாத்தியம் என்று வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் க.ச.33/1 சி காலையில் அடிநிலம் பாத்தியம் இருந்திருந்தால் அதற்கான ஆவணங்களை நான் தாக்கல் செய்திருப்பேன் என்றும் எந்த ஆவணமும் தாக்கல் செய்யாததிலிருந்தே எங்களுக்கு எந்த அடிநிலமும் க.ச.33/1 சி காலையில் இல்லை என்று தெளிவாகும் என்றால் சரியல்ல.

11. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.3 04.10.2021 தேதியில் பிரதிவாதிகள் அடிநிலம் நீங்களாக தட பாத்திய ஒப்பந்தம் ஏற்படுத்திக் கொண்டுள்ளார்கள் என்றால் சரிதான் நாங்கள் இல்லாமல் செய்து கொண்டுள்ளார்கள். வா.சா.ஆ.3 அடிநிலம் நீங்களாக தட பாத்திய ஒப்பந்தம் க.ச.33/1 பி காலையை மட்டும் தான் குறிப்பிடுகிறது என்றால் சரிதான். க.ச.33/1 பி காலையுடன் க.ச.33/1 சி காலையையும் நடந்து கொள்ளலாம் என்று எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

12. வழக்கமாக அறுவடை காலம் என்பது தை மாதம் ஆகும். நவம்பர், டிசம்பர் மாதங்களில் எந்த அறுவடையும் நடக்காது என்றால் சரிதான். கடந்த 05.12.2021 தேதியில் டிராக்டர் எனது தோட்டத்தில் இருந்து சோளத்தினை எடுத்து சென்றதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். தேதி எனக்கு தெரியாது. டிராக்டரின் உரிமையாளர் மற்றும் வாகன எண் என்ன என்று தெரியாது. வாடகைக்கு எடுத்து

வந்தேன். தடுத்து சம்மந்தமாக காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். எந்த காவல் நிலையத்தில் கொடுத்தேன் என்றால் நான் காவல் நிலையத்தில் புகார் கொடுக்க வில்லை.

13. பிரதிவாதிகள் என்னை தடுத்திருந்தால் நான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்திருப்பேன் என்றும், நான் புகார் கொடுக்காததிலிருந்தே நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்பது தெளிவாகிறது என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதிகள் க.ச.33/1பி காலையை பொறுத்து தான் தடபாத்திய ஒப்பந்தம் செய்து கொண்டார்கள் என்றும் க.ச.33/1சி காலையில் தட உரிமை உள்ளதாக எழுதி உள்ளார்கள் என்றும், அதில் எனக்கு எந்த சம்மந்தமும் கிடையது என்று சொன்னால் சரியல்ல.

14. நான் வருவாய் ஆவணங்கள் எதையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வருவாய் ஆவணங்களை தாக்கல் செய்தால் உண்மை நிலவரம் தெரிய வரும் என்பதால் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நாங்கள் கிரையம் பெற்ற 3.60 ஏக்கர் பரப்பளவிற்கு அதிகமாக எந்த பூமியும் எங்களுக்கு கிடையாது என்றால் தடத்தில் உரிமை உள்ளது.

15. நான் உரிமை உள்ளதாக சொல்லும் தடத்தினை பிரதிவாதிகள் தட உரிமையைத் தவிற வேறு எதுவும் எழுதவில்லை என்றால் சரியல்ல. க.ச.33/1பி காலை பூமியானது 1 முதல் 6 பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்டது என்றும், அவ்வாறு அது சம்ந்தமாக ஆவணம் ஏற்படுத்த அவர்களுக்கு உரிமை உள்ளது என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.1 மற்றும் வா.சா.ஆ.2 ஆவணங்களில் தென்வடல் தடத்திற்கும் கிழக்கு என்று தான் செக்குப்பந்தி குறிப்பிடப்பட்டுள்ளது நான் மேற்படி தடத்தில் உரிமை கோர முடியாது என்றால் சரியல்ல.

16. வா.சா.ஆ.1 ஆவணத்திலேயே தடஉரிமை சம்மந்தமாக எந்த குறிப்பும் இல்லை என்றால் சரியல்ல. க.ச.33/1பி, க.ச.33/1சி காலையைப்பொறுத்து அடிநிலம் சம்மந்தமாக எங்களுக்கு எந்த உரிமையும் இ,ல்லாத நிலையில் பொய்யான சங்கதிகளுடன் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளதற்கு எதிராக பிரதிவாதிகள் தகுந்த சட்ட நடவடிக்கைகள் எடுக்க உள்ளார்கள் என்றால் எனக்கு உரிமை உள்ளது.

17. க.ச.33/1பி மற்றும் க.ச.33/1சி காலையைப் பொறுத்து பிரதிவாதிகளுக்கு மட்டுமே அடிநிலத்தில் உரிமை உள்ளதால் நான் தாக்கல் செய்துள்ள இந்த வழக்கு தாக்கல் செய்ய எனக்கு எந்த அருகதையும் கிடையாது என்றால் சரியல்ல. நல்லிக்கவுண்டர் தட உரிமை எழுதிக்கொடுத்த போதே அடிநிலம் நீங்கலாகத்தான் எழுதிக்கொடுத்துள்ளார். வா.சா.ஆ.1 கிரையப்பத்திரத்தை நல்லிக்கவுண்டர், அங்கம்மாள், ரங்கசாமி ஆகியோர் எழுதிக் கொடுக்கவில்லை என்றால் சரிதான்.

18. இந்த வழக்கிற்காக வழக்கு மூலமே கிடையாது என்றும், பொய்யான சங்கதிகளுடன் நான் இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளதால் செலவு தொகையுடன் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டியது என்றும், வா.சா.ஆ.3 தடபாத்திய ஒப்பந்தம் செல்லத்தக்க ஆவணம் என்றும் சொன்னால் சரியல்ல. எனக்கு எழுதப்படிக்க தெரியும் என்றும், வழக்கு பற்றிய சங்கதிகள் நன்கு தெரிந்தும் நான் வேண்டுமென்றே கையெழுத்து போடவில்லை என்று பொய்யாக சொல்கிறேன் என்றும் நான் தாக்கல் செய்துள்ள இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டியது என்றும் சொன்னால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடிவடைந்தது**

**மறு விசாரணை இல்லை**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

V KALIDASAN

Digitally signed by V KALIDASAN
Date: 2025.11.04 18:35:44 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பல்லடம்.